பக்கங்கள்:-21

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 22 | திங்கட்கிழமை | 05.02.2024 | அதிர்வு 188

## கந்தக்காட்டில் மீண்டும் மோதல்

+ 10 பேர் காயம்
+ 36 பேர் கைது
+ இருவர் தப்பியோட்டம்

(கனகராசா சரவணன்)

பொலனறுவை, வெலிக்கந்தை 06



# எமது தாய்நிலம் விடிவுறும் நாளே தமிழர்கள் எமக்குச் சுதந்திர நாள்

## நேற்றைய கறுப்பு தினப் பேரணி நிறைவில் வெளியிடப்பட்ட பிரகடனத்தில் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

எங்கள் தாய்நிலம் விடிவுறும் நாளே தமிழர்களாகிய எங்களுக்குச் சுதந்திர நாள் என்று பொலிஸாரின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களுக்கு மத்தியில் கிளிநொச்சியிலும் மற்றும் மட்டக்களப்பிலும் நேற்று முன்னெடுக்கப்பட்ட கறுப்பு தினப் பேரணி நிறைவில் வெளியிடப்பட்ட பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“இலங்கையின் சுதந்திர தினத்தை கறுப்பு நாளாகப் பிரகடனப்படுத்தி வடக்கு - கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களும், மக்கள் சமூக அமைப்புக்களும், தமிழ் மக்களுமாக இன்று (பெப்ரவரி 4ஆம் திகதி) பேரெழுச்சியாக நாம் ஒன்று திரண்டிருக்கின்றோம். 06

# அநுரவை அழைத்தது இந்தியா!

### தேசிய மக்கள் சக்தியின் உயர்மட்டக் குழு இன்று டில்லி பயணம்



இந்திய அரசின் உத்தியோகபூர்வ அழைப்பையேற்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட கட்சியின் பிரதிநிதிகள் இன்று இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்கின்றனர்.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, செயலாளர் வைத்திய நிபுணர் 06




பத்து நாள்களுக்கு முன்னர் திருகோணமலையில் நடந்து முடிந்த இலங்கைத் தமிழரசு கட்சியின் மத்திய குழு மற்றும் பொதுக்குழு கூட்டங்கள் தொடர்பில் இன்னும் சர்ச்சைகள் தொடர்கின்றன. அடுத்து என்ன என்பது குறித்து குழப்ப நிலைமை நீடிக்கின்றது.

அது குறித்து விரிவான பல தகவல்கள் அடங்கிய செவ்வியொன்றை வழங்கி இருக்கின்றார் எம்.ஏ.சுமந்திரன் 06



# 76 ஆவது தேசிய சுதந்திர தின விழா: பிரதம அதிதியாக தாய்லாந்து பிரதமர்

76 ஆவது தேசிய சுதந்திர தின விழா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் "புதிய தேசம் அமைப்போம்" எனும் தொனிப்பொருளில் நேற்று காலை கொழும்பு காலி முகத்திடலில் வெகுவிமர்சையாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

ஜனாதிபதியின் வருகையைக் குறிக்கும் வகையில் இலங்கை இராணுவத்தினர் இசைவாத்தியங்களை இசைத்த பின்னர், பாதுகாப்பு படைகளின் பிரதானி, முப்படைத் தளபதிகள் மற்றும் பதில் பொலிஸ் மா அதிபர் ஆகியோரால் ஜனாதிபதி, விழா நடைபெறும் மைதானத்தின் கொடிக் கம்பம் அருகே அழைத்து வரப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து பாரம்பரிய மகுல் இசை மற்றும் சக் ஓசைக்கு மத்தியில் ஜனாதிபதியால் தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து விழா நிகழ்வுகள் ஆரம்பமாகின.

ஜனாதிபதி விசேட மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். தொடர்ந்து 105 பாடசாலை மாணவிகள் தேசிய கீதத்தை பாடினர். அதனை தொடர்ந்து பாடசாலை மாணவிகள் ஜெயமங்கல கீதம் மற்றும் காத்தா இசைத்தனர்.

தாய்நாட்டின் சுதந்திரம், இறையாண்மை மற்றும் ஆள்புல ஒருமைப்பாட்டிற்காக உயிரைத் தியாகம் செய்த அனைத்து இலங்கையர்களையும் நினைவுகூரும் வகையில் ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து ஜனாதிபதிக்கு மரியாதைச் செலுத்தும் முகமாக 21 பீரங்கி வேட்டுக்கள் தீர்த்து வைக்கப்பட்டன. அத்துடன், இலங்கை இறையாண்மையுள்ள நாடு என்பதை உலகுக்கு உணர்த்தும் வகையில் 76 ஆவது சுதந்திர தின விழா அணிவகுப்பு பொலிஸ், சிவில் பாதுகாப்பு படை மற்றும் தேசிய கெடட் படையினால் சிறப்பாக முன்வைக்கப்பட்டது.

இலங்கை தேசத்தின் பலத்தையும் பெருந்தன்மையையும் வெளிப்படுத்தும் வகையில் இராணுவப்படை, கடற்படை, விமானப்படை, பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புப் படை மற்றும் தேசிய கெடட் படையைச் சேர்ந்த அதிகாரிகள் தேசியக் கொடிகளை ஏந்தியவாறு அணிவகுப்பில் பங்கேற்றனர்.

அணிவகுப்பு ஊர்வலம் நிறைவடையும் வரை விசேட பீடத்தில் நின்றிருந்த ஜனாதிபதி, அங்கு பயணித்த அனைத்து படைவீரர்களுக்கும் மரியாதை செலுத்தியமை விசேட அம்சமாகும்.

அத்துடன் இலங்கையின் வான் பலத்தை வெளிப்படுத்தும் வகையில், கபீர் விமானங்கள் உள்ளிட்ட இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான விமானங்களின் சாகசங்கள் நிகழ்வை அலங்கரித்தன.

03▶










# 76 ஆவது தேசிய சுதந்திர தின விழா: பிரதம அதிதியாக தாய்லாந்து பிரதமர்

(2ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பரசூட் நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

இதற்கிடையில்,76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு பரிசுத்தப் பாப்பரசர் பிரான்சிஸ், பிரித்தானிய மூன்றாவது சார்ள்ஸ் மன்னர், ஜப்பான் பேரரசர் நருஹிட்டோ, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், தென் கொரியா ஜனாதிபதி யுன் சுக் சுக் யெஓல், இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு, லிபிய ஜனாதிபதி கலாநிதி மொஹமட் ஒய் அல் மென்பி, சிங்கப்பூர் ஜனாதிபதி தர்மன் சண்முகரத்னம், அவுஸ்திரேலிய ஆளுநர் ஜெனரல் டேவிட் ஹர்லி ஆகியோரும் பாகிஸ்தான் ஜனாதிபதி, பங்களாதேஷ் ஜனாதிபதி, குவைத் அமீர் உள்ளிட்ட அரச தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் ஆகியோர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் அரசாங்கத்திற்கும் தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

மகாசங்கத்தினர் மற்றும் ஏனைய மதத் தலைவர்கள், பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், ஆளுநர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தாய்லாந்து பிரதிப் பிரதமர் மற்றும் வர்த்தக அமைச்சர் பூம்தம் வெச்சசாய் உள்ளிட்ட தாய்லாந்து தூதுக்குழுவினர்,வெளிநாட்டு தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பிரதமரின் செயலாளர், அமைச்சரவை செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட ஏனைய அமைச்சுக்களின் செயலாளர்கள், முப்படைகளின் பிரதானிகள் மற்றும் முப்படை தளபதிகள், பதில் பொலிஸ் மா அதிபர், சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட பாதுகாப்பு படைகளின் பிரதானிகள், அரச அதிகாரிகள் மற்றும் படை வீரர்கள் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.













# 76 ஆவது தேசிய சுதந்திர தின விழா: பிரதம அதிதியாக தாய்லாந்து பிரதமர்











# 76 ஆவது தேசிய சுதந்திர தின விழா: பிரதம அதிதியாக தாய்லாந்து பிரதமர்















## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எம்.பி.

'தமிழன்' பத்திரிகையின் ஆசிரியரும் சிரேஷ்ட தமிழ் ஊடகவியலாளருமான ஆர்.சிவராஜா தமது பத்திரிகை 'நெற்றிக் கண்' என்ற பெயரில் ஆரம்பித்துள்ள செவ்வித் தொடரில் முதலாவதாக அந்தப் பேட்டியை அமைத்திருக்கின்றார்.

தமிழரசுக் கட்சியின் நடந்து முடிந்த மத்திய குழு, பொதுக்குழுக் கூட்டங்கள், இனிமேல் நிலைமை என்ன என்பவை தொடர்பில் பல்வேறு சுவாரசியமான அம்சங்கள் அந்தச் செவியில் வெளிப்படுகின்றமையால் அதன் இணைப்பை இங்கு தந்துள்ளேன்.

'தமிழன்' பத்திரிகைக்கும் அதன் ஆசிரியர் சிவராஜாவுக்கும் விநயமான நன்றியுடன் அதனை இங்கு இடம் இடம்பெறச் செய்திருக்கிறேன். கீழே இருக்கும் இணைப்பை அழுத்துவதன் மூலம் அந்தச் செவ்வியை நீங்கள் முழுமையாக செவிமடுக்க முடியும்.

அது நீண்ட செவ்வி என்பதால் இன்று என் கருத்தைப் புதிதாக தெரிவிக்காமல், அந்த விடயங்களை இன்றைய தினத்திற்கான – வாசகர்களுக்கு உரிய – தகவலாக முன்னிறுத்தி நிறுத்திக் கொள்கிறேன்.




## கந்தக்காட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

– கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் இரு குழுக்களுக்கிடையே நேற்று மாலை இடம்பெற்ற மோதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உட்பட 10 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அத்துடன் இந்தச் சம்பவம் தொடர்பில் 36 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும், இருவர் தப்பியோடியுள்ளனர் எனவும் வெலிக்கந்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் அடைத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளில் இரு குழுக்களுக்கிடையில் நேற்று மாலை 4.30 மணியளவில் மோதல் ஏற்பட்டது. அதனைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவர முற்பட்ட இராணுவத்தினரில் ஒருவரும், மோதலில் ஈடுபட்ட 9 கைதிகளுமாக 10 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதையடுத்து மேற்படி சம்பவம் தொடர்பில் 36 பேரைப் பொலிஸார் கைது செய்தனர்.

இதேவேளை, இந்த மோதல் சம்பவத்தினைப் பயன்படுத்தி கைதிகள் இருவர் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர் எனவும், அவர்களைக் கைது செய்யப் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றனர் எனவும் வெலிக்கந்தை பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## அநுரவை அழைத்தது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிஹால் அபேசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், தேசிய நிறைவேற்று பேரவை உறுப்பினர் பேராசிரியர் அனில் ஜயந்த ஆகியோரே இந்த விஜயத்தில் இணைந்துகொள்கின்றனர்.

## எமது தாய்நிலம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஈழத் தமிழர்களாகிய நாம் மரபு வழி தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமைக்கு உரித்துடைய ஒரு தேசிய இனம் என்பதை மீண்டும் உலகுக்கு பிரகடனப்படுத்துகின்றோம்.

வட்டுக்கோட்டைத் தீர்மானம், திம்பு கோட்பாடு, பொங்கு தமிழ் பிரகடனம் என்பவற்றின் ஊடாக வரலாற்றில் தமிழ் மக்களின் அபிலாஷைகள் கூட்டாக பல முறை வெளிப்படுத்தப்பட்ட போதிலும், ஈழத் தமிழர்களின் இனப்பிரச்சனைக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய நிரந்தர அரசியல் தீர்வை காண்பதற்காக மீண்டும் ஒரு தடவை எமது ஏகோபித்த வெளிப்படுத்தலை வலியுறுத்திக்கூற வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து இன்று

பேரெழுச்சியாக நமது தாயகத்தின் மட்டக்களப்பு, கிளிநொச்சியில் ஒன்று திரண்டு நிற்கின்றோம்.

தமிழ், சிங்கள தனித்தனி அரசுகளைக் கொண்டிருந்த இலங்கைத் தீவு காலனித்துவ ஆட்சியாளர்களின் நிர்வாகத் தேவையின் நிமிர்த்தம் இணைக்கப்பட்டது என்ற வரலாற்று உண்மையை முதலில் சிங்கள தேசம் ஏற்றுக்கொள்ள வேண்டும். வரலாற்று நிகழ்வுகளை முற்றாக புறந்தள்ளி எண்ணிக்கையில் பெரும்பாண்மை அடிப்படையில் முழு நாட்டினதும் அதிகாரங்கள் சிங்கள தேசத்திடம் கையளிக்கப்பட்டமை என்பது ஈழத் தமிழினம் மீது தொடர்ச்சியான இன ஒடுக்குமுறைகளுக்கே வழிகோலியது என்பதோடு, சிறிலங்கா அரசு தமிழ் மக்களிடையே எழும் போராட்டங்கள் மற்றும் உரிமைக்கான குரல்களை இராணுவ பலம் கொண்டு நசுக்குவதிலும், சிங்கள வன்முறைக் கும்பல்களின் வெறியாட்டத்துக்கு அனுமதிப்பத்திரம் அளிப்பதிலுமே நம்பிக்கை கொண்டிருக்கின்றது.

சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தனியான சுதந்திர தமிழின அரசை அமைப்பதற்கான வட்டுக்கோட்டை தீர்மானத்துக்கு 1977 ஆம் ஆண்டு மக்கள் மகத்தான ஆணையை வழங்கி தங்கள் சுதந்திர வேட்கையை வெளிப்படுத்தியிருந்ததோடு, 1985ஆம் ஆண்டு திம்புப் பேச்சுவார்த்தையில் தமிழர்களின் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை கோட்பாடு ஏற்றுக் கொள்ளப்பட்டமையும் தீர்வுக்கான வழிகளில் முன்னேற்றம்

காணப்படாமையின் விளைவாகவே தமிழரிடம்ஆயுதப்போராட்டம்கருக்கொண்டது என்பதும் இங்கு நோக்கத்தக்கது.

தமிழர் மீதான திட்டமிட்ட இனப்படுகொலைகளை கடந்த 75 ஆண்டுகளிற்கு மேலாக அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த சிங்கள ஆட்சியாளர்களின் துணையோடு தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட, நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற கட்டமைக்கப்பட்ட படுகொலைகள் – 2009 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அதியுயர் இனவழிப்பு படுகொலைகள் உட்பட மனித படுகொலைகள், நிலங்களை கையகப்படுத்துதல், பாலியல் வன்முறைகள், பண்பாட்டு மற்றும் பொருளாதார கட்டுமானங்களை அழித்தல் போன்ற வன்முறைகள் மூலம் தமிழ் மக்களுடைய தேசத்துக்கான தகுதிப்பாட்டை தாங்கி நிற்கும் அனைத்து விழுமியங்களும் அழித்தொழிக்கப்பட்டு கொண்டிருக்கின்றன என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களுக்கான தீர்வு முயற்சிகள் யாவும் திம்புக் கோட்பாட்டை அடியொற்றியே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதோடு, தமிழ் மக்களினுடைய அபிலாஷைகளை சிறிலங்காவின் ஒற்றையாட்சி அரசமைப்பின் பதின்மூன்றாம் (13ஆம்) திருத்தத்தினுள் முடக்க எத்தனிக்கும் அனைத்து முயற்சிகளையும் முற்றாக நிராகரிப்பதோடு, தமிழர் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வாக தமிழர்களை ஒரு தனித்த தேசமாக அவர்களின் பாரதீனப்படுத்தப்பட முடியாத சுயநிர்ணய உரிமை அங்கீகரிப்பது மட்டுமே மேலே குறிப்பிட்ட அனைத்து ஒடுக்கு முறைகளுக்கும் மீள நிகழாது இருப்பதை உறுதி செய்யும் என்பதை வலியுறுத்துகின்றோம்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் பின்வரும், தமிழ் மக்களின் சமகால அடிப்படைச்சிக்கல்கள்தீர்க்கப்படவேண்டும்என்பதைக் குறிப்பிட்டுக் கொள்கின்றோம்.

1.எமது உறவுகளை தேடும் உரிமை, கருத்துரிமை, பேச்சு உரிமை, வளங்களை அனுபவிக்கும் உரிமை, நீதி கோரும் உரிமை என்பன பயங்கரவாத தடைச் சட்டம், நிகழ் நிலை பாதுகாப்பு சட்டம் மற்றும் நிறைவேற்ற முன்மொழியப்பட்டுள்ள ஏனைய சட்டங்களால் மறுக்கப்படுகின்றன. ஆகவே, இந்தச் சட்டங்கள் மீளப் பெறப்பட வேண்டும்.

2. தொல்பொருட் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், வனவள பாதுகாப்பு திணைக்களம், மகாவலி அபிவிருத்தித் திணைக்களம் என்னும் போர்வையில் மேற்கொள்ளப்படும் அனைத்து வகையான நில அபகரிப்புத் திட்டங்களும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்பதோடு, ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகள் உரியவர்களிடம் மீள ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.தமிழர் தாயகத்தின் நில ஒருமைப்பாட்டை சிதைக்கும் நோக்கில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள அனைத்து சிங்கள குடியேற்றங்களும் அகற்றப்பட வேண்டும்.

4.விடுவிக்கப்படாது எஞ்சியுள்ள ஏனைய தமிழ் அரசியல் கைதிகளும் நிபந்தனை இன்றி விடுதலை செய்யப்பட வேண்டும்.

5. வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்பான அனைத்துலக விசாரணைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படுவதுடன் அவர்களுக்கு அனைத்துலக நீதி வழங்கப்படுவதோடு குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

6. வடக்கு – கிழக்கு தமிழர் தாயகத்தில் தமிழ் இளையோர்கள் கூட்டாக சிந்திப்பதைத் தடுத்து உளவியல் ரீதியாக சிதறடிக்கும் நோக்கம் கொண்டு அரச படைகளின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் போதைப்பொருள் விநியோகம் உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

7. பிராந்திய – பண்பாட்டுப் பல்கலைக் கழகங்களாக விளங்கும் எமது யாழ்ப்பாண, கிழக்கு, வவுனியாப் பல்கலைக்கழகங்கள் பிராந்தியம் சார் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு அம்சங்களை மையமமாகக் கொண்டு செயற்படுதலையும் தமிழ் மாணவர்களின் கல்வி மற்றும் கல்வி சாரா செயற்பாடுகளில் அவர்களது வாய்ப்புக்களின் இருத்தலையும் உறுதி செய்ய வேண்டும்.

8. மனித உரிமை மீறல்கள் வெளிக் கொண்டுவரும் ஊடகவியலாளர்கள், திட்டமிட்ட இன அடக்குமுறைக்கு எதிராக போராட்டங்களை முன்னெடுத்து வரும் மாணவர்கள் மற்றும் மக்கள் சமூக செயற்பாட்டாளர்கள் மீதான அச்சுறுத்தல்கள் மற்றும் கைது செய்யப்படுதல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

9. மக்களின் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு ஏற்படுத்தப்படும் அனைத்து வகையான அச்சுறுத்தல்கள், தடைகளை முடிவுக்கு கொண்டு

07▶

# இலங்கை சுதந்திர தினத்தில் பிரிட்டனில் கண்டனப் பேரணி



இலங்கை சுதந்திர தினத்தை முன்னிட்டு பிரித்தானிய பேரரசின் மன்னரை நோக்கிய மாபெரும் கண்டன கரிநாள் பேரணி நேற்று இடம்பெற்றுள்ளது.

பிரித்தானிய தமிழர் ஒருங்கிணைப்பு குழுவினரின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை 11 மணியளவில் பிரித்தானியா இலங்கை தூதரகத்திலிருந்து ஆரம்பித்து நாடளுமன்ற முன்றிலில் அது நிறைவு பெற்றது.

இலங்கை சுதந்திரமடைந்த 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெறும் ஒடுக்கு முறைக்கு எதிராகவும், வட்டுக்கோட்டை தீர்மானத்தை வலியுறுத்தி தன்னாட்சிக்கான உரிமைக் குரல் எனும் தொனிப் பொருளிலும் கரிநாள் போராட்டம் பிரித்தானிய தமிழர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கரிநாள் பேரணியில் பிரித்தானிய வாழ் தமிழ் மக்கள், பொது அமைப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அத்துடன், பிரித்தானியாவில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு முன்பாக இலங்கைத் தேசியக் கொடி ஏற்றப்பட்டுள்ள நிலையில் அதற்கு நிகராக தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடியும் ஏற்றப்பட்டுள்ளது.

# மட்டக்களப்புக்கு ஆர்ப்பாட்டத்துக்கு சென்றோர் திருப்பி அனுப்பப்பட்டனர்

## வெருகல் பகுதியில் வைத்துப் பொலிஸார் நடவடிக்கை

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலையில் இருந்து மட்டக்களப்புக்கு ஆர்ப்பாட்டத்துக்குச் சென்றவர்கள் வெருகல் பாலத்தில் வைத்து தடுத்து வைக்கப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் திருகோணமலைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தினரால் மட்டக்களப்பு – கல்லடியில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த எதிர்ப்பு ஆர்பாட்டத்தில் கலந்து கொள்வதற்காக திருகோணமலையில் இருந்து பஸ் ஒன்றில் சென்றவர்களே இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டனர்.

வெருகல் பாலத்தில் உள்ள பொலிஸ் சேதனைச் சாவடியில் வைத்து காலை 7.45 மணியளவில் வழிமறித்த பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் படையினர் அவர்களிடம் பஸ் டிக்கெட்டுக்களை கேட்டுள்ளனர். பின்னர் அவர்கள் அனைவரையும் பஸ்ஸில் இருந்து இறக்கி விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர். பஸ்ஸையும் சோதனைக்கு உட்படுத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதன்போது ஆர்ப்பாட்டத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட பதாகைகளும் ஏனைய பொருள்களும் பஸ்ஸில் காணப்பட்டன.

இதன் பின்னர் அனைவருடைய விவரங்களையும் பெற்றதுடன் பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துனரின் ஆவணங்களையும் பறித்துள்ளனர்.

மீறிச் சென்றால் வழக்கு தாக்கல் செய்யப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளனர். புகைப்படங்கள் எடுத்தவர்களுடைய கைத் தொலைபேசியை வாங்கி அனைத்தையும் அழித்துவிட்டு மீண்டும் வழங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நீண்ட நேர வாக்குவாதத்தின் பின்னர் பஸ் மீண்டும் திருகோணமலைக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் கலந்து கொள்வதற்காகத் திருகோணமலை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட சங்க உறுப்பினர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் 53 பேர் இந்தப் பஸ்ஸில் பயணம் மேற்கொண்டிருந்தனர்.

# பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் ரூ.16 கோடியை கறையான் அரித்தது?

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, தனியார் வங்கியொன்றின் பாதுகாப்புப் பெட்டகத்தில் வைப்புச் செய்த பணத்தைக் கறையான் அரித்துள்ளதாக சில செய்தி எஜென்ஸிகள் தெரிவிக்கின்றன.

கடந்த 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகா பொது வேட்பாளராக போட்டியிட்டிருந்தார். அதன் போது அவருக்கு ஐந்து லட்சத்து இருபத்தி ஏழாயிரம் அமெரிக்க டொலர்கள் மற்றும் 100 ஸ்டேர்லிங் பவுண் என்பன தேர்தல் நிதியாக கிடைக்கப் பெற்றிருந்தது. அதன் இன்றைய பெறுமதி சுமார் 16 கோடி ரூபா என்று மதிப்பிடப்படுகின்றது.

எனினும் அன்றைய ராஜபக்ஷ அரசாங்கம் அந்தப் பணத்தை முடக்கியதுடன், பணச்சலவை சட்டத்தின் கீழ் பொன்சேகாவுக்கு எதிராக வழக்கும் தொடுத்திருந்தது.

இதனையடுத்து அந்தப் பணம் தனது தேர்தல் பிரச்சாரங்களுக்காக கிடைத்த அன்பளிப்புப் பணம் என்று சரத் பொன்சேகா சத்தியக் கடதாசி மூலம் உறுதிப்படுத்தி இருந்தார்.

அவ்வாறு முடக்கப்பட்ட பணநோட்டுகள் இதுவரை விடுவிக்கப்படாத நிலையில் பாதுகாப்புப் பெட்டகத்தினுள் கறையான் அரித்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

இதற்கிடையே தற்போதைய பெறுமதியில் 16 கோடிக்கும் அதிகமான பெறுமதி கொண்ட குறித்த பணநோட்டுக்களை தனக்கு மீண்டும் விடுவிக்குமாறு சரத் பொன்சேகா கடிதம் மூலம் நிதியமைச்சிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## எமது தாய்நிலம்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

வரவும் நினைவு கூறும் உரிமையை உறுதி செய்யுமாறும் வேண்டுகின்றோம்.

10. கால காலமாக நடைபெற்று வரும் தமிழின அழிப்புக்கு அனைத்துலக நீதி பொறிமுறை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம், அனைத்துலக நீதிமன்றம் ஊடாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பரிகார நீதி வழங்கப்பட வேண்டும். அத்துடன் ஐக்கிய நாடுகள் அவையில் சிறப்பாக உருவாக்கப்பட்ட தீர்ப்பாயத்தின் பொறிமுறைகளும் அனுமதிக்கப்பட வேண்டும்.

11. தமிழினப் படுகொலையை நிகழ்த்தி தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து தொடர்ந்தும் உரிமை மீறல்கள், சமூக விரோதச் செயல்களுக்கு பாதுகாப்பாக உள்ள இராணுவத்தினர் தமிழர் தாயகத்திலிருந்து அப்புறப்படுத்துவதுடன், மக்களின் செயற்பாடுகளில் தலையிடுவதையும் முற்றாக நிறுத்த வேண்டும்.

இலங்கையில் நிலையான அமைதி ஏற்படுவதற்கு ஈழத் தமிழரின் தேசிய இன பிரச்சினையில் மரபு வழித் தாயகம், தமிழ்த் தேசியம், சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படையில் எட்டப்படும் எந்தவொரு அரசியல் தீர்வும் அனைத்துலக சமூகத்தால் ஒழுங்குபடுத்தப்பட்டு கண்காணிக்கப்படும் பொது வாக்கெடுப்பின் மூலம் தமிழ் மக்களின் ஆணை பெறப்பட வேண்டும் என்பதே எமது உறுதியான நிலைப்பாடாகும். அத்துடன் ஈழத் தமிழர்களின் தலைவிதியை ஈழத் தமிழர்களே தீர்மானித்து எம்மை நாமே ஆழக்கூடிய நிரந்தரத் தீர்வும் பொது வாக்கெடுப்பில் உள்வாங்கப்பட வேண்டும் என்பதைத் தமிழ் மக்கள் சார்பாக இந்தப் பிரகடனத்தின் ஊடாக உலகுக்கு அறிவிக்கின்றோம்." – என்றுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## கர்தினாலுக்குப் பிறந்த ஞானம்

'தனக்குத் தனக்கு என்றால் சுளகு படக்குப் படக்கு என்று அடிக்குமாம்' என்பார்கள்.

இந்த நாட்டில் இடம் பெற்று வரும் பேரின வாத அராஜகங்கள் குறித்து இப்போதுதான் கண்ணீர் விடத் தொடங்கி இருக்கிறார் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை. அவரின் ஆதங்கப் பேச்சு, தமக்குப் பேரிடியான நோவு வந்த பின்னர்தான், இதுவரை காலமும் ஏனையவருக்கு ஏற்பட்ட நோவு - பாதிப்பு - பேரழிவு - குறித்து அவரை சிந்திக்கத் தலை ப்பட வைத்திருக்கின்றது என்பதை அம்பலப்படுத்தி உள்ளது.

இந்த நாட்டில் இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக பௌத்த, சிங்கள பேரினவாதம் பேயுருச் சந்நதம் கொண்டு அட்டூழியங்கள் புரிந்த போது, அது குறித்து வெளிப்படையாகக் கருத்து வெளியிட்டவரோ, கண்டித்தவரோ அல்லர் அவர். அந்தக் கடப்பாடு இருந்தும் அதைச் செய்யாமல் தவிர்த்து வந்தவர்.

இலங்கை தீவில் இன்னொரு சிறுபான்மை எண்ணிக்கை மக்களின் மதமான கிறிஸ்தவத்தின் உயர்தலைவர் என்ற முறையில் இந்தத் தீவில் மோசமான இன அடக்குமுறைக்கும் பேரழிவு நடவடிக்கைகளுக்கும் உள்ளாக்கப் பட்டு வரும் சிறுபான்மை இனத்தவர்களான தமிழர்களின் அவலங்களுக்காக - அங்கலாய்ப்புகளுக்காக - குரல் எழுப்ப வேண்டிய தார்மீக கடப்பாடு அவருக்கு இருந்தது. ஆனால் அந்தச் சமயத்தில் அவர் அதனை செய்யவே இல்லை.

மாறாக, தமிழ் மக்கள் மீது - தமிழர் தேசத்தின் மீது - தமிழ்த் தேசியத்தின் மீது - பேரழிவுக் கொடூரங்களை புரிந்த பேரினவாத அரசுப் படைகளை, தமிழர் தேசம் மீதான யுத்தத்தில் வெற்றி பெறுவதற்கு ஆசீர்வதித்து அனுப்பிக் கொண்டிருந்தார் அவர். இப்போது அவருக்கு 'ஞானம்' பிறந்திருக்கின்றது.

தென்னிலங்கை பேரினவாத அரசியல்வாதிகள் தங்கள் அரசியல் இலக்குகளை அடைவதற்காகத் தனது மத மக்களின் மீது ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் என்ற பேரழிவை கட்டவிழ்த்து விட்டனர் என்ற உண்மை புரிய தொடங்கிய போது - அந்த பேரழிவின் உண்மைகளையும் சூத்திரதாரிகளையும் தங்கள் அரசியல் லாபத்திற்காக அவர்கள் மூடி மறைத்துக் காப்பாற்றுகின்றார்கள் என்று யதார்த்தம் புரியத் தொடங்கிய போது - அதனால், அவருக்கு ஞானம் பிறந்திருக்கிறது.

நேற்று இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு பொரளை தேவாலயத்தில் இடம் பெற்ற விசேட ஆராதனையில் கலந்து கொண்ட போது கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மேற்படி விடயத்தை ஒட்டி தமது கருத்தை - சீற்றத்தை - வெளியிட்டிருக்கின்றார்.

சிங்கப்பூர்த் தலைவர்களை இலங்கைத் தலைவர்களுடன் ஒப்பிட்டுப் பேசிய கர்தினால், இலங்கைத் தலைவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கும், அதிகாரத்தைப் பாதுகாப்பதற்கும் சில பிரிவு மக்களைப் பயன்படுத்தினர்என்றார். சிங்கப்பூர்தலைவர்கள், சீனர்கள், இந்திய வம்சாவளியினர் மற்றும் மலாய் மக்களை ஒன்றிணைத்தனர் என்று அவர் நினைவு கூர்ந்தார்.

சிங்கப்பூர் தேசப்பிதா லீ குவான் யூ இனவாதமற்ற நாட்டைக் கட்டி எழுப்பினார். அங்கு முக்கால் பகுதியினர் சீன வம்சாவளியினராக இருந்த போதும் ஆங்கிலம், மலாய், தமிழ் ஆகிய மூன்று மொழிகளையும் கூட சீனத்துடன் சேர்த்து ஆட்சி மொழியாக்கினார். அதனால் அங்கு இன சமத்துவம் மேலோங்கி, அந்த நாடு செழிப்புற்றுள்ளது. அங்கு இன ரீதியான பாகுபாட்டுக்கோ, அடிமைப்படுத்தலுக்கோ இடமில்லை என்பதை தேச பிதா லீ குவான் யூ உறுதிப்படுத்தினார்.

அதுமட்டுமல்ல, இனவதத்திலிருந்து இலங்கை ஆட்சியாளர்கள் மீளாத வரை இலங்கை நாட்டுக்கு மீட்சி இல்லை என்பதையும் அவர் குறிப்பிட்டுச் சென்றார்.

ஆனால், இலங்கை நாடு என்ன செய்தது? தனிச் சிங்கள சட்டத்தைக் கொண்டு வந்து, இனவாதத்தைக் கிளப்பி, சிறுபான்மையினரை அடக்கி, நாட்டின் பேரழிவுக்கு வழி செய்தது.

அதுமட்டுமல்ல, இன்றுவரை இன அடக்கு முறையையும் பேரினவாத மேலாதிக்க மற்றும் ஆக்கிரமிப்புப் போக்கையும் பெருத்த எடுப்பில் தொடர்கின்றது.

சிறுபான்மையினருக்குஎதிரானபேரழிப்பு நடவடிக்கைகள் இலங்கைத் தீவின் ஆட்சியாளர்களால் முன்னெடுக்கப்பட்ட போது வெறுமனே பார்த்திருந்த கர்த்தினால், இப்போது தனக்குத் தனக்கென பிரச்சினை வந்ததும் முணுமுணுக்கத் தொடங்கியுள்ளார்.

அடக்குமுறை தலைமைத்துவத்திலிருந்து நாட்டை விடுவித்து, புதிய தலைமைத்துவ வர்க்கத்திடம் தேசத்தை ஒப்படைக்கும் அளவுக்கு நாம் தைரியமாகச் செயல்பட வேண்டும். புதிய தலைவரை நியமிக்கும் காலம் வந்துள்ளது என்று அவர் இப்போது பகிரங்கமாக - துணிச்சலாக - கூறுகிறார்.

இதன் அர்த்தம் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மாற்ற வேண்டும் என்பதுதான்.

ராஜபக்ஷக்களின் பின்பலத்தில் அதிகாரத்துக்கு வந்த ரணில் விக்கிரமசிங்க, இப்போது ரணில் - ராஜபக்ஷ அரசை கொண்டு நடத்துகிறார். அத்தோடு ஈஸ்டர் ஞாயிறு குண்டு தாக்குதல் மர்மங்களையும் சூத்திரதாரிகளையும் மூடி மறைக்கும் ராஜபக்ஷக்களின் செயல் திட்டத்தை, ரணிலும் கனகச்சிதமாக தொடர்கின்றமையால் அவர் மீது இப்படி காய்கின்றார் கர்தினால். அவ்வளவு தான்.

# உலக அளவில் ஈழத்துக்கு எதிரான அரசியல் பற்றி யாரும் பேசவில்லை

## தி.மு.கவை குறை கூறுகிறார்கள் என்கிறார் திருமாவளவன்



ஈழம் அழிந்ததற்கு தி.மு.கவை மட்டும் குறை கூறுகிறார்கள். ஆனால் உலக அளவில் ஈழத்தை அழிக்க செய்யப்பட்ட அரசியலைப் பற்றி யாரும் பேசவில்லை.

விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சென்னையில் சர்.பிட்டி. தியாகராயர் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

ஈழத் தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டமைக்குக் காரணம் கருணாநிதி மற்றும் தி.மு.கதான் என்று கூறினால் அது அரசியல்வாதிகளுக்கு வேண்டுமானால் பயன் தரலாம். ஆனால், ஈழத்தமிழர்களுக்கு எப்போதும் பயன் தராது.

ஈழம் அழிந்ததற்கு தமிழ் நாட்டில் உள்ளவர்கள் தி.மு.கவையும் கருணாநிதியையும் மட்டுமே குறை கூறுகின்றனர். ஆனால் உலக அளவில் ஈழத்தை அழிக்க செய்யப்பட்ட அரசியலைப் பற்றி யாரும் பேசவில்லை.

இந்தியாவில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக ஒரு போராட்டம் கூட நடைபெறவில்லை. உலக நாடுகள் ஈழத் தமிழர்களை பயங்கரவாதிகள் என்று திரும்பத் திரும்பக் குறை கூறியுள்ளனர். ஈழத் தமிழர்களை மிகப் பெரிய ஆயுதக் குழுக்களாக மாற்றியது காங்கிரஸ்தான்.– என்றார்.

# குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாமையால் புறாவை விடுவித்துள்ளது இந்தியா!

எட்டு மாத காவலுக்குப் பிறகு இந்தியப் பொலிஸார் புறா ஒன்றை விடுவித்துள்ளனர்.

சீன உளவாளி என்று சந்தேகிக்கப்படும் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாத நிலையில் அது விடுவிக்கப்பட்டுள்ளது.

மும்பை புறநகர் பகுதியான செம்பூரின் பிர் பாவ் ஜெட்டியில் இந்தப் பறவை பிடிபட்டது.

இதன்போது அதன் சிறகுகளில் "சீன எழுத்துக்களில் எழுதப்பட்ட செய்திகளுடன்" அதன் காலில் இரண்டு மோதிரங்கள் கட்டப்பட்டிருந்தன என்று இந்திய செய்தித்தாளான டைம்ஸ் ஒவ் இந்தியா தெரிவித்துள்ளது.

இதனையடுத்து புறாவை பிடித்த பொலிஸார் அதனை மும்பையில் உள்ள விலங்குகளுக்கான வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். இந்த நிலையில் அந்தப் பறவைக்கு எதிராக உளவு பார்த்தது என்று ஒரு வழக்கும் பதிவு செய்யப்பட்டது.

எனினும் விசாரணையின் போது தாய்வானில் இருந்து தப்பித்து இந்தியாவுக்கு வந்த திறந்த நீர் பந்தயப் பறவையே அது என்பதை இந்தியப் பொலிஸார் கண்டுபிடித்தனர்.

இந்த நிலையில் அந்தப் பறவை வைத்தியசாலையில் இருந்து விலங்குகள் வதை தடுப்புக்கான நிலையத்துக்கு மாற்றப்பட்டது. இதனையடுத்து மருத்துவர்கள் அந்த புறாவை விடுவித்தனர்.

உளவு பார்க்கும் பறவையை இந்திய பொலிஸார் சந்தேகிப்பது இது முதல் முறை அல்ல. 2020 ஆம் ஆண்டும் உளவு பார்த்ததாக சந்தேகிக்கப்படும் புறாவை காஷ்மீர் பொலிஸார் பிடித்தனர்.

அது இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் அதிக இராணுவமயமாக்கப்பட்ட எல்லையில் பறந்தபோது பிடிக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டது.

அதேநேரம் 2016 ஆம் ஆண்டு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்ட புறா ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு அதுவும் சிறையில் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நாம் தமிழர் கட்சிப் பிரமுகர் வீட்டில் சோதனை; பிரபாகரன் தொடர்பான புத்தகத்தை எடுத்தனர்!



நாம் தமிழர் கட்சியின் முக்கிய பிரமுகரான சாட்டை துரைமுருகன் வீட்டில் தேசிய புலனாய்வு அமைப்பின் (என்.ஐ.ஏ) அதிகாரிகளால் சோதனை நடத்தப்பட்டு தமிழீழ விடுதலை புலிகளின் தலைவர் பிரபாகரன் தொடர்பான புத்தகமொன்று எடுத்து செல்லப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருச்சி வயலூர் சாலை சண்முகா நகரில் உள்ள அவரின் இல்லத்தில் நேற்று முன்தினம் காலை இந்தத் தீவிர சோதனை நடந்துள்ளது.

சோதனை நடைபெற்ற நேரத்தில் சாட்டை துரைமுருகன் வீட்டில் இல்லாததால் அவரது மனைவி மாதரசியிடம் சுமார் 3 மணி நேரம் விசாரணையும் நடைபெற்றுள்ளது.

இந்த நிலையில் அவரது வீட்டில் இருந்து தமிழீழ விடுதலை புலிகளின் தலைவர் பிரபாகரன் தொடர்பான புத்தகமொன்று எடுத்து செல்லப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் நெடுமாறன் எழுதிய 'பிரபாகரன் தமிழர் எழுச்சியின் வடிவம்' என்ற புத்தகமும் 'திருப்பி அடிப்பேன்' என்ற சீமான் எழுதிய புத்தகமும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சாட்டை துரைமுருகனின் மனைவியிடம் மறு விசாரணை அழைப்பாணையும் கொடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, காளப்பட்டி பகுதியில் முருகன் என்பவரின் வீட்டிலும் சோதனை நடைபெற்றுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



# ஹவுதி கிளர்ச்சியாளர்களைக் குறிவைத்து அமெ., இங்கிலாந்து மீண்டும் தாக்குதல்!

ஹவுதி கிளர்ச்சியாளர்களை குறிவைத்து அமெரிக்கா, இங்கிலாந்து மீண்டும் வான்வழி தாக்குதல் நடத்தியுள்ளன.

இஸ்ரேல் மீது ஹமாஸ் ஆயுதக் குழுவினர் கடந்த ஆண்டு ஒக்ரோபர் 7 ஆம் திகதி பயங்கரவாதத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இதற்குப் பதிலடியாக ஹமாஸ் மீது போர் அறிவித்த இஸ்ரேல், காசா முனையில் தாக்குதல் நடத்தி வருகின்றது.

இந்த நிலையில், இஸ்ரேலுக்கும், ஹமாஸ் ஆயுதக் குழுவுக்கும் இடையேயான போர் 3 மாதங்களுக்கு மேல் நீடித்து வருகின்றது.

இந்தப் போரில் ஹமாஸ் ஆயுதக் குழுவுக்கு ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் குழு ஆதரவு அளித்து வருகின்றது.

செங்கடல் வழியாக இஸ்ரேல் மற்றும் இஸ்ரேலின் ஆதரவு நாடுகளுக்குச் செல்லும் சரக்குக் கப்பல்களைக் குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

ஈரானில் 13 பகுதிகளில் ஹவுதி கிளர்ச்சியாளர்களின் 36 இலக்குகளை குறிவைத்து வான்வழி தாக்குதல் நடத்தப் பட்டுள்ளன. இதன் காரணமாக மத்திய கிழக்கு பகுதியில் பதற்றமான சூழல் நிலவி வருகின்றது.

# சிலி மற்றும் மத்திய சிலி பகுதிகளில் காட்டுத் தீயால் 46 பேர் உயிரிழப்பு!



அமெரிக்காவில் உள்ள சிலி மற்றும் மத்திய சிலி ஆகிய பகுதிகளில் இருக்கும் வனப்பகுதிகள் திடீரெனத் தீப்பற்றி எரியத் தொடங்கின. இதனால் அப்பகுதி முழுவதும் கரும் புகையால் சூழ்ந்துள்ளது. திடீரென ஏற்பட்ட தீவிபத்தால் அங்கிருந்த 1,000 வீடுகளுக்கு மேல் எரிந்து சேதமடைந்தன. இந்த தீவிபத்தில் சிக்கி 46 பேர் பலியாகினர்.

இந்தக் காட்டுத் தீயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என்று அந்த நாட்டு அதிபர் கேப்ரியல் போரிக் எச்சரித்துள்ளார்.

சிலியில் உள்ள காட்டுப் பகுதியில் திடீரென ஏற்பட்ட தீ காரணமாக அந்தப் பகுதி முழுவதும் கரும் புகை மண்டலமாக மாறியுள்ளது.

இந்தக் காட்டுத் தீயை கட்டுப்படுத்தும் பணியில் தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். விமானங்களின் உதவியுடனும் தண்ணீர் எடுத்து வரப்பட்டு தீ அணைக்கப்பட்டு வருகிறது.

தீ பரவ வாய்ப்புள்ள இடங்களில் இருக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அவசரமாக அனுப்பி வைக்கப் பட்டு வருகின்றனர்.

மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இந்தப் பகுதியில் தீ பரவியதால் இதுவரை சுமார் 46 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# சபாநாயகருக்கு எதிராகப் பிரேரணை?



சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை முன்வைப்பது தொடர்பில் எதிர்க்கட்சிகள் ஆராய்ந்து வருகின்றன என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலத்தை மையப்படுத்தியதாகவே நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படவுள்ளது.

நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் முன்வைத்த சில திருத்தங்கள் உள்வாங்கப்படாமல் அது நிறைவேற்றப்பட்டுள்ளது. இதில் சபாநாயகரும் கையொப்பமிட்டு சான்றுரைப்படுத்தியுள்ளார்.

எனவே, அரசமைப்பு மற்றும் நாடாளுமன்ற நிலையியல் கட்டளைக்கு முரணாக சபாநாயகர் செயற்பட்டுள்ளார் என்று எதிரணிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

# தங்காலை - அம்பாந்தோட்டையில் வாகன விபத்தில் 6 பேர் படுகாயம்!



தங்காலை அம்பாந்தோட்டை பிரதான வீதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் 6 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று ஹங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பலாந்தோட்டையில் இருந்து தங்காலை நோக்கிச் சென்ற சிறிய காரொன்றும், ஹங்கமவில் இருந்து அம்பலாந்தோட்டை நோக்கிச் சென்ற வானும் மோதியதில் இவ்விபத்து நேர்ந்துள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

கிவுல பிரதேசத்தில் பஸ் தரிப்பிடத்துக்கு அருகில் பயணிகள் பஸ் நிறுத்தப்பட்ட போது, பின்னால் வந்த வான் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில், பஸ்ஸைக் கடக்க முற்பட்ட போது, எதிரே வந்த காருடன் மோதியுள்ளது.

இந்த நிலையில் 6 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# 23 இந்திய மீனவர்களுக்கு பெப்ரவரி 14 வரை மறியல்

எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டின் கீழ் கைதான 23 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 23 இந்திய மீனவர்கள், நெடுந்தீவுக்கு அண்மித்த கடற்பரப்பில் வைத்து இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பயணித்த இரண்டு படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

கைதான இந்திய மீனவர்கள் மயிலிட்டித் துறைமுகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு வைத்து நீரியல்வளத் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டனர்.

பின்னர் 23 மீனவர்களும் ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் முற்படுத்தப்பட்ட நிலையில், அவர்களை எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார் என்று யாழ். மாவட்ட நீரியல்வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சுதாகரன் தெரிவித்துள்ளார்.



# ஊடக அமைப்பின் தலைவராக பெண் ஒருவர் வடக்கு - கிழக்கில் முதல் முறையாகத் தெரிவு

(வசந்தன்)

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஊடக அமைப்பு ஒன்றின் தலைவராக முதல் முறையாக வவுனியா மாவட்டத்தில் பெண் ஊடகவியலாளர் ஒருவர் தெரிவாகியுள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் கடந்த 12 வருடங்களாக செயற்பட்டு வரும் வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் புதிய நிர்வாக தெரிவு வவுனியா, வைரபுளியங்குளம் ஆதிவிநாயகர் பாலம்பிகை மண்டபத்தில் நேற்று மாலை இடம்பெற்றது.

இதன்போது, வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவராக திருமதி சிவகுமார் திவியா தெரிவு செய்யப்பட்டார். வடக்கு கிழக்கில் பெண் ஒருவர் ஊடக அமைப்பு ஒன்றின் தலைவராக வருவது இதுவே முதல் முறையாகும். வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தில் ஒரேயொரு பெண் ஊடகவியலாளர் அங்கத்துவம் வகித்த நிலையில் அதற்கான சந்தர்ப்பத்தினை ஏனைய ஊடகவியலாளர்கள் ஒருமித்து வழங்கியிருந்தார்கள்.

அத்துடன், சங்கத்தின் செயலாளராக சி.கஜேந்திரகுமாரும், பொருளாளராக சிறிதரன் மனோஜ்ஸும், உபதலைவராக இராசையா ஜெய்சங்கரும், உப செயலாளராக வரதராசா பிரதீபனும் தெரிவு செய்யப்பட்டனர்.

சங்கத்தின் ஆலோசகராக முன்னாள் தலைவர் சு.வரதகுமாரும், கணக்காய்வாளராக இ.சற்சொரூபநும் தெரிவு செய்யப்பட்டனர்.




# வவுனியா சுதந்திர தின விழாவில் மாணவர் உட்பட 4 பேர் மயங்கினர்!



வவுனியாவில் மாணவர்கள், சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் உட்பட 4 பேர் திடீரென மயங்கி விழுந்த நிலையில் அவர்களுக்கு முதலுதவி வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தின விழா வவுனியா மாவட்டத்தில் நேற்றுக் காலை நகர சபை மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு வவுனியா மாவட்ட அரச அதிபர் பி.ஏ.சரத்சந்திர தலைமையில் இடம்பெற்றது. பிரதம அதிதியாக வவுனியா மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர் குலசிங்கம் திலீபன் கலந்து கொண்டார்.

இதன்போதே அவர்கள் மயங்கி வீழ்ந்துள்ளனர்.

அணிவகுப்பில் கலந்துகொண்ட பாடசாலை மாணவர்கள், சிவில் பாதுகாப்புப் படையினர், பொலிஸார் அணி வகுப்பு நிறைவடைந்த பின்னர் பிரதான நிகழ்வு மண்டபத்துக்கு முன்பாக உள்ள மைதானத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த மாணவர்கள், பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஒரு மணி நேரமாக மைதானத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த நிலையில், 2 மாணவர்களும் 2 சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் மயங்கி விழுந்துள்ளனர்.

ஒவ்வொரு வருடமும் இடம்பெறுகின்ற சுதந்திர தின நிகழ்வின் போது வெப்ப தாக்கத்தால் மாணவர்கள் மற்றும் சிவில் பாதுகாப்பு படை வீரர்கள் மயங்கி விழுகின்றமை தொடர்கதையாக இடம்பெற்று வருகின்றது.

எனவே இனிவரும் காலங்களில் இவ்வாறான விடயங்களில் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# யாழில் சுதந்திர தினப் பேரணி வரவேற்கின்றார் சரத் வீரசேகர



இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் பேரணி ஒன்று இடம்பெற்றது. இலங்கை தேசிய கொடிகளுடன் யாழ்.நகர் பகுதியில் ஒன்று கூடிய சிலர் அமைதியாக சுதந்திர தினப் பேரணியிலும் ஒன்று கூடலிலும் பங்குபற்றினர்.

தமிழர் தாயகப் பகுதிகளில் சுதந்திர தினத்தைக் கரிநாளாக அனுஷ்டிக்கும் நிலையில், யாழ்ப்பாணத்தில் தேசியக் கொடியை ஏந்தியவாறு பொதுமக்கள் சிலர் சுதந்தி. தினத்தைக் கொண்டாடியமையை தாம் வரவேற்கிறார் என நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற சுதந்திர தின கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பை மையமாகக் கொண்ட சில சிங்கள அரசியல் கட்சிகளின் பிரமுகர்களும் மற்றும் யாழ்.சிவில் சமூக நிலையம், யாழ்.மகளிர் முன்னணி, யாழ். இளைஞர் பௌத்த சங்கம், யாழ். அம்பேத்கர் இயக்கம் மற்றும் தமிழ் ஆயுதக் குழுக்களால் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் ஆகிய தரப்புகள் ஒன்றிணைந்து இந்தப் பேரணியை ஏற்பாடு செய்தன எனத் தெரிய வருகின்றது.

சுதந்திர தினத்தை கரிநாளாக பிரகடனப்படுத்தி பொது முடக்கத்திலும் மக்கள் ஈடுப்பட்டுவரும் நிலையில் குறிப்பிட்ட சிலர் சுதந்திர தின கொண்டாட்டத்தை நடத்தியுள்ளனர்.

அரசாங்கத்திற்கு ஆதரவாகவே இந்த நிகழ்வு இடம்பெற்றது.

யாழ்.சிவில் சமூக நிலையம் எப்போதுமே இலங்கை அரசாங்கத்திற்கு ஆதரவாக செயற்படுவதுடன், இவ்வாறான ஆதரவு பேரணிகளை கடந்த காலங்களில் நடத்தியுள்ளது.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர், "யுத்தம் முடிவடைந்த பின்னர் தமிழ் மக்கள் இலங்கையின்

அதேபோல் இந்த வருடம் யாழ்ப்பாண நகரில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தேசிய கொடியினை ஏந்தியவாறு இலங்கை 76 ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடியமை வரவேற்கத்தக்க விடயம்." என தெரிவித்தார்.

# இரு போதை பொருள் வியாபாரிகள் மட்டு கல்லடியில் ஐஸ்ஸுடன் கைது!

## ஒருவர் பிரதேச செயலக ஊழியராம்






**(கனகராசா சரவணன்)**

போதை பொருள் வியாபாரிகள் எனக் கருதப்படும் இருவரை 4 கிராம் 760 மில்லிக்கிராம் ஐஸ் போதை பொருளுடன் நேற்று முன்தினம் சனிக்கிழமை கல்லடிப் பகுதியில் வைத்து விசேட அதிரடிப்படையினர் கைது செய்து தங்களிடம் ஒப்படைத்துள்ளனர் எனக் காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த இருவரில் ஒருவர் மட்டக்களப்பு பட்டிப்பளைப் பிரதேச செயலகத்தில் கடமையாற்றி வருபவர் எனவும் கூறப்பட்டது.

விசேட அதிரடிப்படைக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து விசேட அதிரடிப்படைத் தளபதி சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜயசுந்தரவின் ஆலோசனைக்கமைய அம்பாறை மட்டக்களப்பு உதவிப் பொலிஸ் பணிப்பாளர் வாவிடவிதானவழன் வழிகாட்டலின் கீழ் களுவாஞ்சிக்குடி அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஏ.பி. டில்சான் தலைமையில் கான்ஸ்டபிள்களான பண்டார, ஜானக, மதுஷன, ஜெயவீர, விஜயசிங்க ஆகியோர் கொண்ட குழுவினர் இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

சனிக்கிழமை காலை 10 மணியளவில் கல்லடி பகுதியிலுள்ள வீதி ஒன்றில் கண்காணிப்பபில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது அங்கு மோட்டர் சைக்கிள் ஒன்றில் வியாபாரத்துக்காக ஐஸ் போதை பொருளை எடுத்துக் கொண்டு வந்து வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவரையும் அதனை வாங்க சென்ற ஒருவரையும் அங்கிருந்த விசேட அதிரடிப்படையினர் சுற்றிவளைத்து மடக்கி பிடித்தனர். அவர்களிடமிருந்து 4 கிராம் 760 மில்லிக்கிராம் ஐஸ் போதைப் பொருள், மோட்டர்சைக்கிள் ஒன்று, இரண்டு கையடக்க தோலைபேசிகளை மீட்டனர்.

இதில் கைது செய்யப்பட போதை பொருள் வியாபாரி பட்டிப்பளை பிரதேச செயலகத்தில் கடமையாற்றி வரும் கல்லடிபகுதியைச் சேர்ந்தவர் எனவும் இவர்கள் இருவரையும் சான்று பொருளான ஐஸ் போதை பொருளுடன் விசேட அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளனர் எனவும் இவர்களை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.




# த.தே.ம.முன்னணியின் ஆர்ப்பாட்டம் முல்லைத்தீவு செயலகத்தின் முன்பாக

**(விஜயரத்தினம் சரவணன்)**

இலங்கையின் சுதந்திர தினத்தை தமிழர்தேசத்தின் கரிநாளாகப் பிரகடனப்படுத்தி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் ஏழு முக்கிய விடயங்களை வலியுறுத்தி நேற்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் முல்லைத்தீவுமாவட்ட அமைபபாளர் திலகநாதன் கிந்துஜனின் தலைமையில் இது மேற்கொள்ளப்பட்டது.

வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேசநீதிவேண்டும், தமிழ் இனப்படுகொலைக்கு சர்வதேசகுற்றவியல் நீதிமன்ற விசாரணை தேவை, தமிழ் அரசியல் கைதிகள் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்படுதல் வேண்டும், பயங்கரவாதத் தடைச்சட்டம் உடனடியாக நீக்கப்படவேண்டும், தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்படும் நில ஆக்கிரமிப்பு உடனடியாக நிறுத்தப்படவேண்டும், தமிழர் தாயகத்திலுள்ள வரலாற்றுத் தொல்லியல் சான்றுகளை அழிக்காதே, இறைமை, சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டித் தீர்வு வேண்டும் உள்ளிட்ட ஏழு விடயங்கள் இவ்வார்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. நல்லாட்சி அரசாங்கம் என்ற பெயரிலான மைத்திரி – ரணில் அரசாங்கம், தமிழ் தரப்புடன் இணைந்து தயாரித்த புதிய ஏக்கியராஜ்ஜிய (ஒற்றையாட்சி) அரசமைப்பு வரைவை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முற்றாக நிராகரிப்பதாகவும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

இவ்வார்ப்பாட்டத்தில் பங்கேற்றிருந்தவர்களை புலனாய்வாளர்கள் படம் எடுத்து அச்சுறுத்துகின்ற வகையில் செயற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்புப் பேரணியும் நேற்று பொலிஸாரினால் தடுத்து நிறுத்தம்

**(பழுவூரான்)**

“ஸ்ரீலங்கா தேசத்தின் சுதந்திர தினம் தமிழர் தேசத்தின் கரிநாள்” எனும் தொனிப் பொருளில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களால் நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பில் நடத்தப்பட்ட பேரணி அரசடி தேவாலயப் பகுதியில் வைத்துத் தடுத்து நிறுத்தப்பட்டது.

அந்தப் பகுதியில் நூற்றுக்கணக்கான பொலிஸார் குவிக்கப்பட்டு, வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இந்நிலையில் போராட்டக்காரரர்கள் தடையைத் தாண்டிப் பயணிக்க முயற்சித்த போதிலும் அவை கை கூடாத நிலையில் அவர்கள் கலைந்து சென்றனர்.

இப்போராட்டத்தை நடத்த அனுமதிக்கக் கூடாது எனப் பொலிஸாரால் நீதிமன்றத்தில் தடை விதிக்கக் கோரி செய்யப்பட்ட மனு நீதிவானால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பேரணியில் மட்டக்களப்பு மாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், முன்னாள் மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன், ஈரோஸ் ஜனநாயக முன்னணி உறுப்பினர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சங்கத்தின் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.





# பல்கலை மாணவர்களை நான் மீட்கச் சென்றபோது பொலிஸார் ஒருவர் என் மீது தாக்குதல் நடத்தினார்!

## வீடியோ ஆதாரம் உண்டு என்கின்றார் சிறிதரன் எம்.பி.

பல்கலைகழக மாணவர்களைப் பொலிஸார் தாக்கியவேளை நான் அவர்களை மீட்கச்சென்றபோது பொலிஸார் ஒருவர் என்மீது தாக்குதல் நடத்தியிருந்தார் என நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய நாள் பொலிஸார் தாங்கள் நடந்துகொண்ட விதத்தின் மூலம் இலங்கை அரசாங்கத்தின் அராஜகத்தை – கோரமுகத்தை – சர்வதேச சமூகத்தின் கண்களிற்கு கொண்டுவந்திருக்கின்றார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைகழக மாணவர்கள் மீதும் பொதுமக்கள் மீதும் பொலிஸார் மிகவும் காட்டுமிராண்டித்தனமான முறையில் நடந்துகொண்டனர் எனவும் பல மாணவர்கள் காவித் தூக்கிச்செல்லப்பட்டனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெண் பொலிஸார் இல்லாமல் பெண்கள் இழுத்துச் செல்லப்பட்டார்கள், தூக்கி வானிலே வீசப்பட்டார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சியில் ஊர்வலம் வருகின்றபோது தண்ணீர்த் தாரை வாகனத்துடன் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசிய பொலிஸார் மிகவும் மிலேச்சத்தனமாகவும் அடாவடியாகவும் நடந்துகொண்டார்கள்.

ஜனநாயக அடிப்படையில் தமக்கிருக்கின்ற மனித உரிமைகளின் அடிப்படையில் போராட்டத்தை முன்னெடுத்த பல்கலைகழக மாணவர்கள், பொதுமக்கள் மீது மிகவும் மோசமாகவும் காட்டுமிராண்டித்தனமாகவும் பொலிஸார் நடந்துகொண்டமை வரலாற்றில் மீண்டும் ஒருமுறை இலங்கையில் பொலிஸாரின் அடாவடித்தனத்தை அடையாளப்படுத்தியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பல மாணவர்கள் அடித்து துன்புறுத்தப்பட்டார்கள். இதுவெல்லாம் நடைபெற்ற பின்னர் ஐந்து மாணவர்கள் கைதுசெய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்ட விடயத்திலே அந்த மக்கள் பிற்பகல் 3.30 மணிவரை காத்திருந்தார்கள். அவர்களை விடுதலை செய்யும் வரை வெளிக்கிடமாட்டோம் என காத்திருந்தார்கள். நண்பர் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ல்ஸ் நிர்மலநாதனும் பல்கலைகழக மாணவர்களும் பொலிஸ் நிலையம் சென்று அவர்களை விடுவித்துக்கொண்டு வந்த பின்னர் தான் இந்தப் போராட்டம் முடிவிற்கு வந்திருக்கின்றது எனவும் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பல்கலைகழக மாணவர்களைப் பொலிஸார் தாக்கியவேளை நான் அவர்களை மீட்கச்சென்றபோது பொலிஸார் ஒருவர் என்மீது தாக்குதல் நடத்தியிருந்தார். அதற்குரிய வீடியோ ஆதாரங்கள் உள்ளனநான் அதனை உரிய நேரத்தில் வெளியிடுவேன். – எனவும் சிறீதரன் தெரிவித்துள்ளார்.



# யாருடைய சுதந்திரத்தை கொண்டாடுகின்றார்கள்?

## கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கேள்வி



நாடு அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்துள்ளது. தலைவர்கள் யாருடைய சுதந்திரத்தை கொண்டாடுகிறார்கள்? ஆட்சியாளர்களின் சுதந்திரமா? மக்களின் சுதந்திரமா? வெளிநாட்டில் இருந்து பிரதிநிதிகளை வரவழைத்து பட்டினியால் வாடும் மக்களை நாட்டின் உயரதிகாரிகளுக்கு முன்னால் அவமானப்படுத்துவது சுதந்திரமா? நாட்டை ஒடுக்கும் தலைமையிலிருந்து விடுவித்து புதிய தலைவரை நியமிக்கும் நேரம் வந்துவிட்டது.

– இவ்வாறு தெரிவித்தார் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை.

சுதந்திர தினத்தை முன்னிட்டு பொரளை தேவாலயத்தில் இடம்பெற்ற விசேட ஆராதனையில் கலந்து கொண்ட போதே கர்தினால் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவிக்கையில் –

ஈஸ்டர் தாக்குதலின் குற்றவாளிகள் இன்றும் அரசியலில் உள்ளனர். இன்றும் பொலிஸ் துறையில் உள்ளனர்.

இன்று நாட்டில் சட்டம் இல்லை. சட்டத்திற்கு இடமில்லை. அக்கிரமம் இருக்கிறது. இதனை நினைத்து ஒரு நாடாக நாம் வெட்கப்பட வேண்டும்!

“நாடு அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் வீழ்ச்சியடைந்துள்ளது. யாருடைய சுதந்திரம் கொண்டாடப்படுகிறது என்று தலைவர்களிடம் கேளுங்கள். ஆட்சியாளர்களின் சுதந்திரமா? மக்களின் சுதந்திரமா?

எங்கள் அழகான தாய்நாடு துரதிர்ஷ்டவசமானது. அடக்குமுறை தலைமைத்துவத்தில் இருந்து நாட்டை விடுவித்து புதிய தலைவரை நியமிக்கும் காலம் வந்துள்ளது.

புதிய தலைமைத்துவ வர்க்கத்திடம் தேசத்தை ஒப்படைக்கும் அளவுக்கு நாம் தைரியமாகச் செயற்பட வேண்டும்.

பிந்தைய ஆண்டுகளில் நம் நாட்டை ஆட்சி செய்தவர்கள் மக்கள் நலனைப் பற்றிச் சிந்திக்காமல் தங்கள் எதிர்காலத்தைப் பற்றி மட்டுமே நினைத்தனர். எனவே இந்த வகை தலைமைத்துவத்தை அகற்றி புதிய தலைமைத்துவ வர்க்கத்தை கொண்டு வருவது அவசியம்” – என அவர் மேலும் தெரிவித்தார்.

சிங்கப்பூர்த் தலைவர்களை இலங்கைத் தலைவர்களுடன் ஒப்பிட்டுப் பேசிய கர்தினால், இலங்கைத் தலைவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கும் அதிகாரத்தைப் பாதுகாப்பதற்கும் சில பிரிவு மக்களைப் பயன்படுத்தினர் என்றார். சிங்கப்பூர் தலைவர்கள், சீனர்கள், இந்திய வம்சாவளியினர் மற்றும் மலாய் மக்களை ஒன்றிணைத்தார், என்று அவர் நினைவு கூர்ந்தார்.

# நான் ரணில் விக்கிரமசிங்கவின் ஆதரவாளனல்லன் ஆனால் அவரை விட்டால் இங்கு வேறு யாருமில்லை

## இப்படி விளக்கம் கூறுகின்றார் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க





ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும் என்று கூறிய காரணத்தினால், தன்னை அவரது ஆதரவாளர் என்றும், கட்சியை உடைக்க தயராகி வருகிறேன் எனவும், ராஜபக்ஷவினருக்கு எதிராக செயற்படுகிறேன் எனவும் சிலர் சுமத்தும் குற்றச்சாட்டை முற்றாக நிராகரிக்கிறேன் என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கட்டான மற்றும் திவுலப்பிட்டிய பிரதேச சபைகளின் முன்னாள் பிரதிநிதிகளுடன் உடுகம்பளவில் உள்ள தனது வீட்டில் நடந்த சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

தற்போதைய சந்தர்ப்பத்தில் ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர நாட்டுக்கு மாற்று நபர் எவரும் இல்லை என்பதால், எனது மனசாட்சிக்கு இணங்க ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகக்குரல் கொடுத்து வருகிறேன்.

இது எந்த வகையிலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ராஜபக்ஷவினருக்கு எதிரான நடவடிக்கையல்ல.

நாடு பற்றி சிந்தித்தே நான் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மற்றுமொரு சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும் எனக் கூறி வருகிறேன்.

ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக நிறுத்த ரணில் விக்கிரமசிங்கவை தவிர வேறு மாற்று நபர் இருப்பார் எனில் யோசனையை முன்வையுங்கள் என்று பிரசன்ன ரணதுங்க உள்ளூராட்சி சபைகளின் முன்னாள் பிரதிநிதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எனினும் அப்படியான மாற்று நபர் எவரும் இல்லை என அவர்கள் பதிலளித்துள்ளனர்.



# நாட்டின் சுதந்திர தினமான நேற்று 600 சிறைக் கைதிகளுக்கு விடுதலை

76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நாட்டில் பல பகுதிகளிலும் உள்ள சிறைச் சாலைகளிலும் இருந்து சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொது மன்னிப்பின் கீழ் நாடு பூராகவும் இருந்து சுமார் 600 சிறைக் கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சிறு குற்றங்களுக்காகக் குறுகிய காலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ். இந்திரகுமார் உள்ளிட்ட சிறைச்சாலை அதிகாரிகள் விடுதலையான கைதிகளுக்கு கைலாகு கொடுத்து வீடுகளுக்கு வழியனுப்பி வைத்தனர்.

இதேவேளை, வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையிலும் கைதிகளை விடுதலை செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது 12 கைதிகள் இவ்வாறு சிறைச்சாலை அதிகாரிகளினால் கைலாகு கொடுத்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

24 கைதிகள் மட்டக்களப்பு சிறைச்சாலையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு சிறைச்சாலையின் பிரதான ஜெயிலர் எஸ். பிரபாகரன் தலைமையில், ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை சிறைச்சாலையில் இருந்து ஆறு சிறைக்கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அத்தியட்சர் எச்.கே.டி.என்.பிரேமவங்கவின் தலைமையில் இது இடம்பெற்றுள்ளது.

இதன்போது, திருகோணமலை சிறைச்சாலையின் பதில் பிரதான பொறுப்பதிகாரி சுகத் அமரசிங்க, புனர்வாழ்வு அதிகாரிகள் மற்றும் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# முல்லைத்தீவு கடலில் இறால் பிடிபடும் வீதம் அதிகரித்தது!

## கடற்றொழிலாளர் சம்மேளத்தின் ஊடக பேச்சாளர் அருள்நாதன் தெரிவிப்பு

முல்லைத்தீவு கடற் பகுதிகளில் இறால்கள் பிடிபடும் வீதம் அதிகரித்துக் காணப்படுகிறது என்று முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளத்தின் ஊடக பேச்சாளர் அருள்நாதன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாள் ஒன்றுக்கு சராசரியாக 5 ஆயிரம் கிலோ கிராம் இறால் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்களின் வலைகளில் பிடிபடுகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளாக முல்லைத்தீவு கடற்பகுதிகளில், இந்திய கடற்றொழிலாளர்களின் ஆக்கிரமிப்பு அதிகளவில் காணப்பட்டது.

இதன் காரணமாக இறால்களின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது. தற்போது இந்த நிலைமையில் சற்று மாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமை தொடர வேண்டும்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இது தொடர்பில் அவரிடம் கோரிக்கை ஒன்றை முன்வைக்கின்றோம். முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகமாக இடம்பெற்று வரும் சட்ட விரோத கடற்றொழில் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த வேண்டும் அவரே நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றார்.

ශ්‍රී ලංකා නිදහස් පක්ෂය
ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி
SRI LANKA FREEDOM PARTY

# யாரை ஆதரிப்பது என சு.க. இதுவரை முடிவு ஏதுமில்லை

எந்தவொரு ஜனாதிபதி வேட்பாளருக்கும் ஆதரவளிப்பது தொடர்பில் இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி குறிப்பிட்ட ஒரு ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவளிப்பதாகவும், ஜனாதிபதி தேர்தலில் அரசாங்கத்தை ஆதரிப்பதாகவும் சில அரசியல்வாதிகள் கூறுவது பொய்யான தகவல் எனவும் அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

எந்தவொரு ஜனாதிபதி வேட்பாளருக்கோ அல்லது தற்போதுள்ள அரசாங்கத்திற்கோ ஆதரவளிப்பது குறித்து அரசியல் கட்சி என்ற ரீதியில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இதுவரை எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கவில்லை என அக்கட்சி அறிவித்துள்ளது.



# நெல் களஞ்சியசாலை இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் விவசாயிகள்!

திருகோணமலை – மொரவெவ பிரதேசத்தில் நெல் களஞ்சியசாலை இன்மையால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் வெளி மாவட்டங்களில் இருந்து வருபவர்களுக்கு குறைந்த விலையில் நெல்லை விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த முறை நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கரில் பெரும் போக செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடன் பட்டு விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த போதிலும் நிர்ணய விலைக்கு நெல்லை விற்பனை செய்ய முடியாமல் உள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஒரு ஏக்கர் வயல் வெட்டுவதற்காக 15 ஆயிரம் ரூபா செலவு செய்ய வேண்டியுள்ளது என்றும் ஒரு கிலோ நெல்லின் விலை 80 ரூபாவாக வெளி மாவட்ட வியாபாரிகளுக்கு விற்பனை செய்ய வேண்டியுள்ளது என்றும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

நெல் களஞ்சியசாலை இன்மையே இந்த நிலைக்குக் காரணம் என்று தெரிவித்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மொரவெவ பிரதேசத்துக்கு உரிய நெல் களஞ்சியசாலையை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுகின்றனர்.

# களுத்துறை நீதிமன்றில் சந்தேகநபர் தப்பியோட்டம்

களுத்துறை நீதிமன்ற வளாகத்தில் இருந்து சந்தேக நபர் ஒருவர் தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொள்ளை மற்றும் ஹெரோயின் வைத்திருந்த சம்பவம் தொடர்பில் சந்தேக நபருக்கு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

இந்நிலையில், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சந்தேகநபர் அளுத்கம பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற வளாகத்துக்கு அழைத்து வரப்பட்டிருந்த நிலையில் அவர் தப்பிச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபர் பொலிஸ் ஜீப்பில் நீதிமன்ற வளாகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு அதன் கதவைத் திறந்ததும்,



அவருடன் கைவிலங்கிடப்பட்ட மற்றைய சந்தேகநபர் முகத்தில் தாக்கி கைவிலங்குகளை கழற்றிவிட்டு தப்பிச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றில் கடமையாற்றியிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் சந்தேக நபரை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்த அதிகாரிகள் அவர்களை துரத்திச் சென்ற போதும் சந்தேக நபர் அவர்களிடமிருந்து தப்பிச் சென்றுள்ளார் என்று மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபரை கண்டுபிடிப்பதற்காக அளுத்கம பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.



# அனைத்து மக்களும் சம உரிமையை அனுபவித்தாலே சுதந்திரம் பிறக்கும்!

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களும் சம உரிமைகளை அனுபவிக்க கூடிய சூழ்நிலை மலரும் பட்சத்திலேயே நிலையான சுதந்திரம் பிறக்கும்.

இவ்வாறு நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியிலேயே இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

பல்லின சமூகங்களும் வாழும் இலங்கை திருநாடு சுதந்திரம் அடைந்து 76 ஆண்டுகள் ஆகிவிட்டன.

இந்த உன்னதமான நாளை இலங்கையர்களாக நாம் அனைவரும் ஒன்றிணைந்து எமது நாட்டுக்கே உரித்தான பாரம்பரிய நடைமுறைகளுடன் கொண்டாட வேண்டும்.

சுதந்திரம் என்பது தனக்கு மட்டும் அல்ல தன்னை சூழ உள்ளவர்களுக்கும் இருக்க வேண்டும் என்ற உணர்வோடு செயற்பட வேண்டும்.

நாடு சுதந்திரம் அடைந்தாலும் எமது மலையக பெருந்தோட்ட மக்கள் அரசியல், பொருளாதாரம், சமூக ரீதியிலான பிரச்சினைகளில் இருந்து இன்னும் விடுதலையாகவில்லை.

எனவேதான் எமது மக்களையும் தேசிய நீரோட்டத்தில் சங்கமிக்க வைப்பதற்காக எல்லா விதமான நடவடிக்கைகளையும், நகர்வுகளையும் முன்னெடுத்துவருகின்றோம்.

லயன் யுகத்தில் இருந்து விடுபட வேண்டுமெனில் காணி உரிமை அவசியம், அதனை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பல்லின சமூகமும் வாழும் இலங்கையில் இன நல்லிணக்கம், ஐக்கியம் என்பது மிக முக்கியம். இலங்கையில் நீடித்த அமைதி, நிலையான அபிவிருத்தி என்பன இன நல்லிணக்கத்திலேயே தங்கியுள்ளன.

எனவே, இன நல்லிணக்கத்துக்காகவும் நாம் கூடுதல் அக்கறையுடன் செயற்பட வேண்டும்.- என்றார்.

# வரி அடையாள எண்ணை பெறுவதில் திருத்தங்கள்!

18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் வரி அடையாள எண்ணை பெறுவதற்காக அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட முறையில் நிதி அமைச்சகம் திருத்தங்களை அறிமுகப்படுத்தவுள்ளது.

இந்த முறைமையை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சிக்கல்கள் தொடர்பில் உள்நாட்டு இறைவரித்துறை அதிகாரிகளின் முறைப்பாட்டை தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த முறையை அறிமுகப்படுத்துவதற்கு சுமார் 2.5 பில்லியன் ரூபா தேவைப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலையில் எண்ணை வைத்திருப்பவருக்கு அஞ்சல் மூலமே அதனை தெரிவிக்க வேண்டியுள்ளது.

எனினும் இந்த முறையை நடைமுறைப்படுத்துவதற்கு தங்களுக்கு மனித வளம் இல்லை என்று இறைவரித்துறை அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனையடுத்து இந்தச் செயல்முறைக்காக ஒரு நாளைக்கு ஆயிரத்து 500 ரூபா கொடுப்பனவுடன் இளங்கலை பட்டதாரிகளைத் தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யவுள்ளனர் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் இந்த முறையை கட்டாயமாக்குவதற்கு ஒரு வருடம் தேவை என்று உள்நாட்டு இறைவரி சேவை சங்கத்தின் செயலாளர் எச்.ஏ.எல். உதயசிறி தெரிவித்துள்ளார்.

ஆள்பதிவுத் திணைக்களம், மோட்டார் போக்குவரத்து திணைக்களம் மற்றும் வங்கிகளின் தரவுத் தளங்களுடன் இந்த அமைப்பு இணைக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.



# 'ஆவா' கும்பலின் தலைவன் என்று சந்தேகிக்கப்படும் நபர் கைதானார்!

யாழ்ப்பாணத்தில் பல குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 'ஆவா' கும்பலின் தலைவன் என்று சந்தேகிக்கப்படும் நபரை வளன ஊழல் ஒழிப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

வளன ஊழல் ஒழிப்பு செயலணியின் பணிப்பாளர் சாமிக்க விக்கிரமசிங்கவின் உத்தரவின் பேரில் பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர் இந்திக்க வீரசிங்க தலைமையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்லும் நோக்கில் மவுண்ட் யசோரபுர பகுதியில் உள்ள இரண்டு மாடி வீடொன்றின் மேல் மாடியில் தங்கியிருந்த போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஐஸ் போதைப்பொருள் பாவனைக்கு அதிகளவில் அடிமையாகியிருந்த அவரிடம் இருந்து

அவர்,கைது செய்யப்பட்ட போது ஒரு கிராம் 300 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டது என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 05.02.2024




இன்றைய நாள் சுமூகமாகச் செல்லும். நண்பர்கள் மற்றும் நெருங்கியவர்கள் உங்கள் மீது நம்பிக்கையுடன் இருப் பார்கள். இன்று நீங்கள் மகிழ்ச்சியுடன் இருக்கலாம்.

பணியிடத்தில் உங்களுக்கு இனிமையான ஆச்சரியங்கள் காத்திருக்கும். நீங்கள் உற்சாகத்துடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மூலம் பிரச்சினைகளை எளிதாக சமாளிக்கலாம். உங்கள் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

உங்களிடம் இருக்கும் பணம் உங்களுக்கு திருப்தி கரமாக இருக்கும். கிடைக்கும் பணத்தை சிறந்த முறை யில் பயன்படுத்துங்கள்.

உங்களின் மகிழ்ச்சியான மன நிலை காரணமாக தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் கடின முயற்சி மூலம் நீங்கள் வெற்றி காண்பீர்கள். நீங்கள் தன்னம் பிக்கையுடன் காணப்படுவீர்கள். முக்கிய முடிவுகள் நன்மை அளிக்கும்.

உங்கள் உறுதி மற்றும் நேர்மை காரணமாக உங்கள் பணிக்கு நல்ல பெயர் கிடைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள் வீர்கள். இருவரும் பயனுள்ள விஷயங்களை கலந்து ஆலோசிப்பீர்கள்.

கடன்கள் மூலம் சில பண வரவு காணப்படும். இதன் மூலம் உங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

இன்று தேக ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.இந்த நேரத்தை நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள்




இன்று பொதுவாக மகிழ்ச்சி காணப் படும். நீங்கள் இன்றைய நாளை புதிய தொடர்புகள் ஏற்படுத்திக்கொள்ள பயன்படுத்தலாம். பொது நிகழ்ச்சிகள் மற்றும் விருந்துகளில் கலந்து கொள்வது மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமை மதிக்கப்படும். உங்கள் பணிகளை விரும்பி செய்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் மனம் திறந்து பேசுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமையை சிறந்த முறையில் பராமரிப்பீர்கள். பங்கு வர்த்தகத்தால் லாபமும் பயனும் அடைவீர்கள்.

ஆரோக்கியத்தைப் பொருத்தவரை இன்று சிறப்பான நாள். இன்று சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக் காது. சில சூழ்நிலைகள் உங்களுக்கு வருத்தத்தை உருவாக்கும். மகிழ்ச்சியாக இருக்க முயலவும். பிரார்த்தனை மற்றும் வழிபாடு ஆறுதலை அளிக்கும்.

பணியிடத்தில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் பணிகளை கவனமாக ஆற்ற வேண்டும்.

இன்று உங்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கு ஏற்ற நாள் அல்ல. எனவே எந்த விஷயத்தையும் எளிதாக எடுத் துக்கொள்ள வேண்டும்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். உங்கள் தேவைகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். உங்கள் தேவைகளுக்கு கடன் கூட வாங்குவீர்கள்.

சனி சம்பந்தமான பிரச்சினைகளால் பாதிப்பு காணப்படும். பிரார்த்தனை மேற்கொள்வது சிறந்தது.




நீங்கள் அறிவுபூர்வமாக செய லாற்றுவதன் மூலம் இன்று எழும் பிரச்சினைகளைக் கையாள இயலும். இன்றைய நாள் சாதகமாக்கிக் கொள்வது உங்கள் கையில் தான் உள்ளது.

சிறப்பாக பணியாற்றுவதற்கு இன்றைய நாள் அனுகூலமாக இருக்காது. பணிகள் அதிகமாக இருக்கும் என்பதால் முறையாக திட்டமிடுவது அவசியம்.

நீங்கள் சிறிய விஷயத்தை கூட பெரிய அளவில் காண்பீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிப் படுத்துவீர்கள். மகிழ்ச்சியான போக்கு சிறந்தது.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். பொறுப்புகள் அதிகமாக காணப்படுவதால் கையில் பணம் குறைவாக காணப்படும்.

ஒவ்வாமை காரணமாக சளி இருமல் போன்ற தொல்லை கள் காணப்படும்.




இன்று சிறப்பாக நாளாக அமை யும். கடினமான பணிகளைக் கூட எளி தாக செய்து முடிப்பீர்கள். சகஜமான அணுகுமுறை மூலம் எளிதாக இலக்கை அடையலாம்.

உங்கள் பணியில் சிறந்த வெற்றி பெறுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். எந்த விஷயத்தையும் புது முறையில் ஆற்றுவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் மகிழ்ச்சியான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் இருவரி டையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

கணிசமான பண வரவின் காரணமாக இன்று மறக்க முடியாத நாளாக இருக்கும். பங்கு வர்த்தகத்தில் சேமிப் பதன் மூலம் பணம் சம்பாதிக்கலாம்.




நம்பிக்கையும் மன உறுதியும் இன்று மிகவும் அவசியம். தைரியமின்மையால் பிரச்சினைகள் உருவாகும். எதிர்மறை எண்ணங்களை தவிர்க்க வேண்டும்.

பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. கவன முடம் பணியாற்ற வேண்டும்.

உங்கள் மனதில் குழப்பம் காணப்படும். இது கோப மாக வெளிப்படும். இதனை உங்கள் துணையிடம் வார்த் தையில் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி பாதிப்படையும்.

இன்று தேவையற்ற செலவுகள் ஏற்படும். இதனால் உங்கள் பணச் சுமை அதிகரிக்கும்.

பதற்றம் காரணமாக கால் வலி ஏற்படும். உடற்பயிற்சி மூலம் ஆறுதல் பெறலாம்.




ஆன்மீக ஈடுபாடு ஆறுதல் அளிக் கும். புத்திசாலித்தனமாக யோசிப்பது சிறந்த பலனைத் தரும்.

இன்று பணியில் வளர்ச்சி காண உகந்த நாள் அல்ல. குறித்த நேரத்தில் பணிகளை முடிக்கும் உங்கள் திறமை களைக் குறைக்கும் வகையில் சில தடைகள் ஏற்படும்.

நீங்கள் உங்கள் துணையுடன் மிகுந்த உணர்ச்சி வசப்படுவீர்கள்.சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. ஆன்மீக நோக்கத்திற்காக பணத்தை செலவு செய்வீர் கள்.

அதிக நீரைப் பருகி உங்களை ஆரோக்கிய மாக வைத்திருங்கள். இதனால் வயிற்று உப்பசம் சீராகும்.

# இன்றைய ராசி பலன்கள் - 05.02.2024




எந்த ஒரு செயலையும் ஒன்றுக்கு இரண்டு தடவைகள் யோசித்துச் செயல் பட வேண்டும் உங்கள் வார்த்தைகளில் கவனம் தேவை. மனதில் குழப்பம் வேண்டாம். பிரார்த்தனை மூலம் வெற்றி கிடைக்கும்.

இன்று பணியில் வெற்றி காண்பது அரிது. பணியை குறித்த நேரத்தில் முடிக்க திட்டமிடல் அவசியம்.

மனக் குழப்பம் காரணமாக உறவின் நல்லிணக்கம் பாதிக்கும். காரணமேயில்லாமல் உங்கள் துணையுடன் சூடான விவாதங்கள் செய்ய நேரும்.

இன்று பண விரயம் காணப்படும்.செலவுகளை கட்டுப் படுத்த முடியாது. கவனமாக செலவு செய்ய வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. பல் வலி காணப்படும். கண்களுக்கும் சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது.




இன்று சற்று மந்தமான நிலை காணப்படும். ஆன்மீக ஈடுபாடு திருப் தியை அளிக்கும்.

இன்று புதிய பணி வாய்ப்புகள் உங்களுக்கு அதிக திருப்தியை அளிக் கும். சாதித்த உணர்வு ஏற்படும்.

உங்கள் துணையுடன் கலந்தாலோசிக்க இது ஏற்ற நாள். இதனால் உறவில் மகிழ்ச்சியும் நல்லிணக்கமும் காணப்படும்.

இன்று அதிக பண வரவு காணப்படும். ஊக்கத் தொகை வகையில் இன்று பண வரவைக் காணலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று முழுவதும் நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பீர் கள்.




எதிர்காலம் பற்றிய எண்ணங்கள் உங்கள் மனதில் ஓடும். இது அனைவ ரிடத்திலும் காணப்படும். முக்கியமான செயல்கள் செய்வதற்கு இன்று ஏற்ற நாள்.

பணிகளை எளிதாக மேற்கொள் வீர்கள். பணிகளை சுமூகமாகக் கையாள்வீர் கள்.

உங்கள் துணையுடன் நட்பான முறையில் நடந்து கொள்வீர்கள். இதனால் உறவின் பிணைப்பு வலுப் படும்.

இன்று நிதிநிலைமை ஸ்திரமாக இருக்கும். திருப்திகரமான நிலை காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். மகிழ்ச்சி நிலவும்.




வாக்குவாதங்கள் ஏற்படும் என்பதால் உரையாடுவதற்கு முன் கவனம் தேவை. சகஜமான அணுகுமுறை தேவை.

உங்கள் பணிகளை துல்லியமாகவும் தரத்துடனும் மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடன் தகவல் பரி மாற்ற பிரச்சினை காணப்படும். நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. தேவை யற்ற செலவினங்கள் காணப்படும்.

உங்கள் கண்களில் கவனம் செலுத்துங்கள். சளி, முதுகுவலி போன்ற உபாதைகள் ஏற்பட வாய்ப் புள்ளது. தியானம் மேற்கொள்வது சிறந்தது.





